பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**13 11 2025** **THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1)** கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு இந்தியாவும் — போட்ஸ்வானாவும் ஒப்புக்கொண்டிருப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

**2)** ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களுக்கு, ஊதியக்குழுவின் பலன்கள் மற்றும் அகவிலைப்படி உயர்வு போன்ற சலுகைகள் கிடைக்காது என்று வெளியான தகவல்களை மத்திய அரசு மறுத்துள்ளது.

**3)** பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்படுகின்றன.

**4)** தில்லி கார் குண்டுவெடிப்பு சம்பவத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு ஆதரவு தெரிவித்த தென்கொரியா, சிங்கப்பூர் நாடுகளுக்கு மத்திய அரசு நன்றி தெரிவித்துள்ளது.

**5)** உலக ஸ்னூக்கர் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அனுபமா ராமச்சந்திரன் பட்டம் வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

வர்த்தகம், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது என இந்தியாவும் — போட்ஸ்வானாவும் ஒப்புக்கொண்டுள்ளன.

போட்ஸ்வானா சென்றுள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, அந்நாட்டு தலைநகர் **Gaborone**-ல் இந்திய வம்சாவளியினரிடையே இன்று உரையாற்றினார்.

போட்ஸ்வானா அதிபர் திரு **Duma Boko**-வுடன், தாம் ஆக்கப்பூர்வமான ஆலோசனை நடத்தியதாகவும், சுகாதாரம், டிஜிட்டல் தொழில்நுட்பம், வேளாண்மை, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் இருநாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

போட்ஸ்வானாவில் பல்வேறு துறைகளில் **10** ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியர்கள் ஈடுபட்டிருப்பதாகவும், இந்தியாவின் தூதர்களாக செயல்படும் அவர்களுக்கு தமது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாகவும் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

முன்னதாக, போட்ஸ்வானா நாட்டில் இருந்து இந்தியாவிற்கு வழங்கப்படும் சிவிங்கி புலிகள் குடியரசுத் தலைவர் முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டது.

<<<<<<>>>>>

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் ஏற்பாடுகள் குறித்து குடியரசு துணைத்தலைவரும், மாநிலங்களவைத் தலைவருமான திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று ஆலோசனை நடத்தினார்.

புதுதில்லியில் உள்ள நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், மாநிலங்களவை துணைத்தலைவர் திரு ஹரிவன்ஷ் மற்றும் மாநிலங்களவை செயலாளர் உள்ளிட்ட உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, ஒருநாள் பயணமாக வரும் 19-ஆம் தேதி தமிழகத்தின் கோவை மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார்.

விவசாயிகள் சங்கங்களின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தென்னிந்திய இயற்கை வேளாண்மை உச்சிமாநாட்டில் பிரதமர் உரையாற்ற உள்ளார்.

தென் மாநிலங்களை சேர்ந்த இயற்கை வேளாண் விஞ்ஞானிகளுடன் பிரதமர் கலந்துரையாட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

தில்லி கார் குண்டுவெடிப்பு சம்பவத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு ஆதரவு தெரிவித்துள்ள தென்கொரியா மற்றும் சிங்கப்பூர் நாடுகளுக்கு வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் நன்றி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதுகுறித்து பதிவிட்டுள்ள அவர், தென்கொரிய வெளியுறவு அமைச்சர் **Cho Houn,** சிங்கப்பூர் வெளியுறவுத்துறை அமைச்சர் **Vivian Balakrishnan** ஆகியோர் தெரிவித்த ஆதரவுக்கு இந்தியா மதிப்பளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

**2025-**ஆம் ஆண்டு நிதிச்சட்டத்தின்படி, ஊதியக்குழு பலன்கள் மற்றும் அகவிலைப்படி உயர்வு போன்ற சலுகைகள் ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களுக்கு கிடைக்காது என்று வெளியான தகவல்களை மத்திய அரசு மறுத்துள்ளது.

இதுதொடர்பாக, பத்திரிகை தகவல் அலுவலகத்தின் உண்மை கண்டறியும் பிரிவு வெளியிட்டுள்ள தகவலில், அதுபோன்ற செய்திகள் போலியானவை என்று தெரிவித்துள்ளது.

ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கான சலுகைகளில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று தெளிவுபடுத்தியுள்ள பத்திரிகை தகவல்

அலுவலகம், உண்மைக்கு புறம்பான அந்த செய்திகளை மக்கள் நம்ப வேண்டாம் என்றும், பகிர வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<<<>>>>>

பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகளை 2 ஆயிரத்து 95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்வதற்கு பாரத் டைனமிக்ஸ் நிறுவனத்துடன், பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

பாதுகாப்புப் படையில் T-90 ரக பீரங்கிகளின் திறனை மேம்படுத்தும் வகையில், இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சக செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பாதுகாப்புத்துறையில் இந்திய ராணுவத்தின் செயல்பாட்டு தேவைகளை எதிர்கொள்ளும் மத்திய அரசின் முயற்சியின் ஒருபகுதியாக இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

உள்நாட்டு தொழிற்சாலைகளில் அதிநவீன தொழில்நுட்பங்களை மேம்படுத்தும் வகையிலும், பாதுகாப்புத் துறையில் சுயசார்பு இந்தியா திட்டத்தை செயல்படுத்தும் வகையிலும் இந்த ஒப்பந்தம் அமைந்திருப்பதாக அந்த செய்திக்குறிப்பு மேலும் தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்படுகின்றன.

மாநிலத்தின் **38** மாவட்டங்களில் **46** வாக்கு எண்ணும் மையங்களில் காலை எட்டு மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்குகிறது.

**243** தொகுதிகளை கொண்ட பீகார் மாநில சட்டப்பேரவைக்கு கடந்த ஆறு மற்றும் **11-**ஆம் தேதிகளில் இரண்டு கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெற்றது.

வாக்கு எண்ணிக்கைக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாக மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு வினோத் சிங் குஞ்சியால் தெரிவித்துள்ளார்.

வாக்கு எண்ணும் மையங்களில் மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

நாடு முழுவதும் இரண்டாம் கட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் இம்மாதம் **4-**ஆம் தேதி தொடங்கியதிலிருந்து, இதுவரை **42** கோடி விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது

இது 82 புள்ளி ஏழு ஒன்று சதவீதமாகும்.

அதிகபட்சமாக, உத்தரப்பிரதேச மாநிலத்தில் 12 கோடியே 33 லட்சம் படிவங்களும், மேற்குவங்கத்தில் 7 கோடியே 14 லட்சம் படிவங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் நடைபெற்று வருகின்றன.

அடுத்த மாதம் 4-ஆம் தேதிவரை இந்த பணிகள் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

சர்தார் வல்லபாய் பட்டேலின் 150-வது பிறந்த தின விழாவையொட்டி, நாடு முழுவதும் தேசிய ஒற்றுமை தின கொண்டாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அதன் ஒருபகுதியாக தமிழகத்தின் நாமக்கல் நகர் பகுதியில், மத்திய அரசின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை சார்பில் ஒற்றுமை பேரணி நடைபெற்றது.

சர்தார் வல்லபாய் பட்டேல் ஆற்றிய அரும்பணிகளை இளைஞர்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் இந்த பேரணி

அமைந்ததாக நாமக்கல் மாவட்ட இளைஞர் அலுவலர் திருமதி கீர்த்தனா தெரிவித்தார்.

***(Sound Byte — கீர்த்தனா - 27 Sec.)***

இந்த பேரணியில் பங்கேற்றது தங்களுக்கு மிகப்பெரும் ஊக்கத்தை ஏற்படுத்தியதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

***(Sound Byte — மாணவர்கள் — 42 Sec.)***

<<<<<<>>>>>

உலக ஸ்னூக்கர் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அனுபமா ராமச்சந்திரன் பட்டம் வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

கத்தாரில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், ஹாங்காங்கின் **Ng On — Yee** -ஐ வென்றார்.

--------------

மகளிர் உலக்கோப்பையை வென்ற இந்திய கிரிக்கெட் அணியினர், தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவை இன்று தில்லியில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

----------------

கஜகஸ்தானில் நடைபெற்றுவரும் உலக கோப்பை **Short Track Speed Skating** போட்டியில் ஆடவர் ஆயிரத்து **500** மீட்டர் பிரிவில் இந்தியாவின் **Advay Kothari** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--------------

உலக கோப்பை செஸ் போட்டியில இந்தியாவின் அர்ஜுன் எரிகேசி, ஹரிகிருஷ்ணா ஆகியோர் ஐந்தாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

கோவாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், இன்று நடைபெற்ற நான்காவது சுற்று டை பிரேக்கர் ஆட்டத்தில் அர்ஜுன் எரிகேசி, ஹங்கேரியின் பீட்டர் **Leko**-வை வென்றார்.

மற்றொரு டை பிரேக்கர் ஆட்டத்தில் ஹரிகிருஷ்ணா, ஸ்வீடனின் **Nils Grandelius** -ஐ வென்றார்.

---------------

தென்னாப்பிரிக்கா ஏ அணிக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா ஏ அணி வெற்றிபெற **286** ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ராஜ்கோட்டில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், முதலில் பேட் செய்த தென்னாப்பிரிக்கா ஏ அணி நிர்ணயிக்கப்பட்ட **50** ஓவரில், **9** விக்கெட் இழப்பிற்கு **285** ரன் எடுத்தது.

**<<<<<<END>>>>>**